# தமிழினமே! தாயகமே!



பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா

# தமிழினமே! தாயகமே!!

பாடும்மீன்

சு. ஸ்ரீகந்தராசா

**தமிழினமே! தாயகமே!!**

○

**கவிதை**

○

எழுதியவர்:
**பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராஜா**

பிரியா பிரசுரம் - 14

முதற் பதிப்பு:
**ஜூன் 2003**

ஓவியம்
**கிக்கோ**

அச்சுப் பதிப்பு:
**ஏ.ஜே.**

விலை:
**ரூபா. 125/-**

**இந் நூலாக்கத்திற்கான முழுப்பொறுப்பும் பதிப்புரிமையும் நூலாசிரியருக்குரியதே.**

## உள்ளே ...


| | | |
|---|---|---|
| | அ. மலர்க் காணிக்கை | 5 |
| | ஆ. பதிப்புரை | 6 |
| | இ. அணிந்துரை | 8 |
| 1. | நாமகள் வணக்கம் | 13 |
| 2. | அவுஸ்திரேலிய தமிழ் வாழ்த்து | 14 |
| 3. | பொங்குதமிழ் வலிமை தரும் | 16 |
| 4. | தம்பியின் தூமதி வென்றிடும் | 17 |
| 5. | தாங்குவேன் ஆயுதம் | 19 |
| 6. | தமிழ் மண்ணில் கால்பதிப்போம் | 21 |
| 7. | எழுவாய் வருவாய் | 23 |
| 8. | புலிகளை மனதில் பொறி | 25 |
| 9. | புலிகளை மீறி ஓர் செயலா? | 26 |

10. தமிழீழம் மலரும் 28
11. ஈழம் மலர்ந்தது 30
12. மாவீரர்கள்

அ. முன்னுரை மொழிவு 32
ஆ. தேசீயத் தலைவர் 34
இ. மாவீரர்கள் (பொது) 35
ஈ. கரும்புலிகள் 37
உ. கடற்கரும்புலிகள் 39
ஊ. வேவுப்புலிகள் 41
எ. மகளிரணி 43
ஏ. பொதுமக்கள் படை 45

13. மாவீரர் புகழ்பாடுவோம் 47
14. ஈழத்துக் கண்ணகிகள் 48
15. கோர நிகழ்வுகளும் சோக நினைவுகளும் 53
16. சிறையை விதித்தது முறையா 61
17. மாமனிதர் எலியேசர் 62
18. மாமனிதர் பேராசிரியர் எலியேசர் 64
19. நண்ப ஜோய் மகேஸ்! 67
20. ஈழமுரசு 69
21. இன்பத் தமிழ் ஒலி 72
22. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 73
23. எப்படி வரும் சமாதானம்? 74
24. திருந்திவிடு தமிழா 75
25. ஆதரவாளர் 77
26. உளம் பெயர்ந்தோர் 80
27. நடிக்கிறார்கள் 81
28. மங்களம் (நாட்டியப்பாடல்) 84

## மலர்க் காணிக்கையாக....

காற்றோடு காற்றாகக்
கலந்துபோய்விடாமல்
காலத்தின் பதிவாக
தொடர்ந்து வாழவேண்டுமென்று
நச்சரித்து நச்சரித்து
நண்பர்கள் வேண்டியதால்
இச்சையொன்று எனக்குள்
எழுந்து தூண்டியதால்
இத்தொகுப்பு வருகிறது
புத்தகமாய் மலர்கிறது

மேடைகளில் ஏற்பட்ட தேவைகளின் போதும்
தேவைகள் ஏற்பட்ட வேளைகளின் போதும்
பாடிய கவிதைகளே அதிகம் அடங்கும்
பாடலாய் இசையோடு சிலகவி விளங்கும்

உள்ளத்தில் எழுந்து உணர்ச்சியின் வேகத்தில்
வெள்ளமாய்ச் சுரந்து விளம்பிய கவிகளும்
அடக்கு முறைகளில் துடித்த உள்ளதில்
வெடித்த நினைவுகள் வடித்ததும் அடங்கும்

தாயகம் தமிழினம் தமிழ்மொழி மூன்றையும்
தம்முயி ரிலும்மிக உயர்வாய் மதித்து
மாவீர ராகியே நிலைக்கின்ற வித்துக்கள்
மறவர்கள் தமிழரின் ஈடற்ற சொத்துக்கள்

ஈழத்தின் விடுதலை யொன்றையே நினைத்து
இன்னுயிர் ஈந்துநம் மண்ணினைக் காத்தவர்
காலடி களிலிந்தக் கவிகளை மலர்களாய்
காணிக்கை யாக்கியென் கைகூப்பு கின்றேன்

**பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா**

## பதிப்புரை

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சுயநூலை வெளியிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த மையம், சற்று விரிவடைந்து பல அறிஞர்களின் நூல்களையும் பிரசவித்துள்ளது.

இன்று தேசத்தையும் கடந்து 14வது வெளியீட்டில் சர்வதேச எல்லையைத் தொட்டு, அவுஸ்திரேலியாவில் வாழும் எம்மவரான திரு. சு. ஸ்ரீகந்தராஜாவின் நூலைப் பிரசவிக்கிறது.

ஸ்ரீ அண்ணாவின் நூலைப் பிரசவிப்பதில் மகிழ்ச்சி .

ஸ்ரீ அண்ணா தாயக மண்ணில் நிலைகொண்டிருந்த வேளையில் அவர் நடித்த நாடகங்கள் "சந்ததிச் சுவடுகள்" என்ற பெயரில் நூலாயிற்று. அந்த நாடகங்களை விரும்பிப் படித்ததுண்டு. நண்பர்களைக் கொண்டு அந்த நாடகங்களை மேடையேற்றியதுண்டு.

ஆனால் அவரின் முகம் அறியேன். அவர் புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியா சென்று விட்டார்.

அங்கு அவர் அவுஸ்திரேலிய இலங்கை தமிழ்ச் சங்கத்தில் தலைவராக இருந்த காலத்தில் சர்வதேச ரீதியில் அவர்களால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பல தடவைகள் பரிசில்களைப் பெற்றுள்ளேன்.

போட்டி நடாத்திய விதம் - பரிசில்கள் வழங்கிய நேர்மை. அவரைக் காண மாட்டோமா என்ற ஆதங்கத்தை ஏற்படுத்திற்று.

நீண்ட காலங்களின் பின்பு..... 2003ல் இலக்கியச் சந்திப்பு ஒன்றில் அவரைக் காணும் பாக்கியம் கிடைத்தது.

பேசினேன் - பழகுவதற்கு இனிமையானவராக இருந்தார். உறவு தொடர்ந்தது.

அந்த உறவினால் இந்தக் கவிதையைப் பிரசுரிக்கும் சுமை என்மீது சுமத்தப்பட்டது.

படைப்பிற்கு பொறுப்பாக அவர் இருந்தாலும் அதனை சுமையாக ஏற்றுக் கொண்டேன்.

அதன் பலன் -

அந்தப் படைப்பு நூலாகிறது.

அத்துடன் ஸ்ரீ அண்ணாவின் இன்னும் பல நூல்கள் எதிர்காலத்தில் இம்மையத்தினால் வெளிவரும் என்ற நம்பிக்கையுண்டு. மீண்டும் இன்னுமொரு நூலில் சந்திப்போம்.

**- பதிப்பாளர் -**

## அணிந்துரை

கலை கலைக்காவே என்னும் குரல் ஒன்று அன்றும், இன்றும் ஒலித்தபோதும், ஒரு காலத்தின் கண்ணாடியே கலை என்ற குரல் வலுப்பெற்றிருப்பது மறுக்கமுடியாத உண்மையாகும். கலைஞன், தான் வாழும் காலத்தின் தேவைகளைத் தனது மக்களின் போராட்டங்கள், வெற்றிகள், தோல்விகள், இன்பங்கள், அவலங்கள், ஏக்கங்கள், கனவுகள் பலவற்றையும் உள்வாங்கி, அவற்றைத் தனதாக்கி அவற்றுக்குக் கலைவடிவம் கொடுக்கும்போது அவன் கலைக்குரிய சமுதாயப் பணியைச் செய்து முடிக்கிறான் என்று துணியலாம். கலைகளில் இலக்கியம் முக்கிய இடத்தை வகிக்கிறது. கவிதை அதற்குப் பெருந்துணையாக விளங்குகிறது.

இந்தவகையில் நூலாசிரியர் பாடுமீன் சு. ஸ்ரீகந்தராசா அவர்களின் கவிதைத் தொகுப்பை நான் நோக்குகின்றேன். தமிழினம், ஈழத்தில் நீண்ட வரலாற்றையும், பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் கொண்ட ஒரு மக்கள் கூட்டமாகும். தமிழ்த்தேசியதின் இன்றைய முதிர்ச்சிக்குக் காரணம் இந்த யதார்த்த நிலையைப் பிறர் மறுத்ததுடன்

அதனைச் சிதைக்கவும் முற்பட்டதேயாகும். அதற்கு எதிரான உணர்வுகளின் பரிணாம வளர்ச்சியே ஆயுதப் போராட்டம். இந்தப் போராட்டத்தின் விளைவுகளோ பல, அவற்றை ஸ்ரீகந்தராசா தன் கவிதைகளுக்குப் பாடு பொருளாக்கியுள்ளார். இந்த முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

பிள்ளைப்பிராயத்திலிருந்தே கவிதையிடம் காதல் கொண்ட திரு. சு. ஸ்ரீகந்தராசா அவர்கள் அவ்வப்போது எழுதிய கவிதைகளை ஒரு தொகுப்பாக வெளியிடுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. காலத்தின் தேவையும் இதுவே! இவரது தமிழ்ப்பற்றையும், இனப்பற்றையும், தமிழ் உணர்வையும் இக்கவிதைத் தொகுப்பு பறைசாற்றி நிற்கின்றது. மெல்பன் நகரத்துத் தமிழ் மேடைகளும் இவரது கவிதைகளை நன்கு அறியும்.

இந்த இடத்தில் திரு. சு. ஸ்ரீகந்தராசா அவர்களைப் பற்றியும், அவுஸ்திரேலியாவில் அவரது கலை இலக்கிய முயற்சிகள், தமிழ்ப்பணிகள் பற்றியும் குறிப்பிடுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ் மொழியில் சிறந்த அறிவும், தாயக மண்ணில் மிகுந்த பற்றும் கொண்ட ஸ்ரீ, 1991ஆம் ஆண்டு இந்த நாட்டுக்குப் புலம்பெயர்ந்து வந்து சில மாதங்களிலேயே பொதுப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

'மாவீரன் எல்லாளன்' என்னும் நாடகத்தினை எழுதி, இயக்கி, மேடையேற்றியதுடன் அதில்

எல்லாளனாகத் தானே நடித்து எல்லாளன் என்னும் தமிழ் மன்னனைப் பற்றிய சரியான தகவல்களை வெளிப்படுத்தினார். இன்றைய போராட்டத்தின் நியாயங்களை எதிர்வுகூறுமுகமாக எல்லாளன் நாடகத்தில் அவர் எழுதியிருந்த வசனங்கள் மிகவும் சாதுரியமாய் அமைந்திருந்தன.

தொடர்ந்து அவர் எழுதிய இயக்கிய கன்னிமனம், அப்படியோ சங்கதி (தாளலயம்), மெல்பேண் கந்தையா என்னும் நாடகங்கள் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பின்னணிகளையும், போராட்டத்தின் நியாயங்களையும் தெளிவுறுத்தும் வகையில் அமைந்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றன.

அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழகத்தின் தலைவராக இருந்து இங்குள்ள தமிழ் மக்களுக்காகவும் ஈழத்தமிழ் அகதிகளுக்காகவும் சிறப்பான சேவைகளைச் செய்தார்.

அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஸ்ரீ ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. இங்கு ஈழத்தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ்விழாவை நடாத்துகின்ற பொறுப்பை ஏற்றுக் கடந்த பதினொரு ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றார் இது தொடர்பாக ஈழத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அனைத்துலக ரீதியிலான சிறுகதை, கவிதைப் போட்டிகளையும், இங்குள்ள மாணவர்களிடையே பேச்சு, இசைப் போட்டிகளையும் ஒழுங்கு செய்து இன்றுவரை மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக 1999 ஆம் ஆண்டு அவர் பதவியேற்றார். 21 வருடங்களாக இலங்கைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் இயங்கிவந்த தமிழ்ச் சங்கம் ஈழத்தமிழ்ச் சங்கம் எனப் பெயர் மாற்றம் பெற்றது இவரது பதவிக்காலத்தில்தான், இந்த நாட்டில் முதல்முதல் முழுக்கமுழுக்க தமிழ் இசைப் பாடல்களே இடம்பெற்ற ஒரு தமிழ் இசை விழாவை இங்குள்ள இசை மேதைகளைக் கொண்டு நடாத்தி, பிறமொழிக் கலப்பில்லாத தமிழிசையின் பெருமையினை வெளிப்படுத்தினார். அவரது பதவிக்காலத்தில் தமிழிசைவிழாவைத் தொடர்ந்து நடாத்தினார். அத்துடன் தமிழ் நடன விழாவையும் நடாத்தினார். இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகளை நிர்வகிப்பதில் மிகுந்த அக்கறைகொண்டு உழைத்தார்.

எல்லோரையும் கவரும் விதத்தில் மிகவும் இனிமையான வகையில், அடுக்குமொழியில் பேசும் அவரது ஆற்றல் வியக்கத்தகுந்தது. கடந்த வருடம் சென்னையில் நடைபெற்ற அனைத்துலக தமிழர் பேரமைப்பு மாநாட்டில் அவர் ஆற்றிய உரை அறிஞர்பெருமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. அவரது பாடல்கள் இங்குள்ள கலைஞர்களால் இசையமைக்கப்பட்டு இன்னிசை மாலை முதலிய நிகழ்ச்சிகளில் பாடப்பட்டுள்ளன. அவற்றில் சில இக்கவிதைத் தொகுதியிலும் இடம்பெற்றுள்ளதைக் காண்கின்றேன்.

தென்தமிழ் ஈழ மண்ணின் மைந்தரான ஸ்ரீயின் மண்வாசனைமிக்க தமிழ் உணர்வுக் கவிதைகள்

என்னைப் போன்றவர்கள் இலகுவில் படித்து இன்புறும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளன. எமக்குப் பழக்கமான சொற்களால் ஆக்கப்பட்டுள்ளன. இது மிகவும் வரவேற்கத்தக்கது. ஈழத் தமிழ் மக்களின் இன்றைய காலகட்டத்தின் வரலாற்றுப் பதிவுகளாக அவரது கவிதைகள் விளங்குகின்றன.

எமது உடன்பிறப்புக்கள் போர்க்காலச் சூழலைச் சித்தரிக்கும் கவிதைகளை, சிறுகதைகளை, போர் உலா போன்ற பரணிகளைப் போர்க்களத்திலிருந்தே படைத்துள்ளார்கள். அந்த வழியில் நின்று புலம்பெயர்ந்து வாழும் ஸ்ரீ தாய்மண்ணின் நிகழ்வுகளைக் கவிதைகளுக்குப் பொருளாக்கிப் பாடியிருப்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவரது கவிதைத் தொகுப்பை தமிழ் மக்கள் படித்து இந்த முயற்சிக்கு ஊக்கமும் ஒத்தாசையும் அளிப்பீர்கள் என்று நம்புகின்றேன். கவிதைகள் வழங்கும் கருத்துக்களுக்குச் செவிமடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். நூலாசிரியர் திரு. சு. ஸ்ரீகந்தராசாவிற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புடன்

**தி. ஜெயக்குமார்**
**பொறுப்பாளர்**
**தமிழர் ஒருங்கிணைப்புக்குழு,**
**அவுஸ்திரேலியா – நியூசிலாந்து.**

## நாமகள் வணக்கம்

நாமகள் என்பார்கள்
நானிலத்தோர் தமிழ் மாநிலத்தோர்
பூமகள் என்பார்கள்
பூதலத்தோர் தமிழ்ப் புகழ்நிலத்தோர்
பாமகள் என்பார்கள்
பாடிநிற்போர் தமிழ்ப் பாட்டிசைப்போர்
தேமகள் எந்நாவைத்
தீட்டிநிற்பாள் தமிழ் ஊட்டிநிற்பாள்.

## அவுஸ்திரேலிய தமிழ் வாழ்த்து

தமிழ் வாழ்கவே தமிழ் கலைவாழ்கவே
தமிழ் பேசும் சமுதாயம் நிலையான புகழோடு
தரணி எங்கும் வாழ்கவே

அழகான பொன்னாடு நமதீழ நன்னாடு
அதை என்றும் நாம் வாழ்த்திப் பாடுவோமே
அஸ்திரேலி யநாடு நாம் வாழும் இந்நாடு
அதில் எங்கள் தமிழ்பேசி ஆடுவோமே
(தமிழ் வாழ்கவே)

மெல்பேணில் சிட்னியில் அடிலைட்டில் ஹோபாட்டில்
மேன்மை கொள் தலைநகராம் கன்பராவில்
பிறிஸ்பேணில் டாவினில் பேத்திலென் றெங்கணும்
பெரு மைகொள் வளர்தமிழை வாழ்த்துவோமே
(தமிழ் வாழ்கவே)

வீடுகள் தோறும்தேன் மொழி பேசுவோம் கூடி
விளையாடுவோம் தமிழ் இசை பாடுவோம்
ஆடுவோம் நண்பர்கள் கூடுவோம் தமிழர்கள்
அனைவோரும் தமிழினில் உரையாடுவோம்
(தமிழ் வாழ்கவே)

(மேற்குறித்த பாடல்களுடன் மூன்றாவது பாடலாகக் கீழ்வரும் பாடல் சேர்க்கப்பட்டுப் பாடசாலைக் கீதமாகத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பாடசாலைகளில் பாடப்படுகின்றது)

தமிழ்மொழி பயிலவே விக்ரோறி யாவினில்
தமிழ்ச்சங்கத் தமிழ்ப் பாடசாலை எட்டாம்
கிளேய்ட்டன்மில் பாக்விந்தம் பிறிம்பேங் டன்டினோங்
கிளன்வேவலி பொக்சில் பிறஸ்ற்றன் கூலார்
(தமிழ் வாழ்கவே)

## பொங்குதமிழ் வலிமை தரும்

பொங்கு தமிழ் உணர்வின் முரசு கொட்டும்
எங்கள் நிலம் அனைத்தும் எழுந்து நிற்கும்
தங்கத் தமிழ் அணங்கின் உளம் சிரிக்கும்
வங்கக் கடல் இரைந்து வாழ்த்து ரைக்கும்

எங்கள் புலி மறவர் உயிர் கொடுத்தார்
பொங்கு தமிழ ரங்கே தோள் கொடுத்தார்
எங்கும் தமிழ ரின்று குரல் கொடுத்தார்
சிங்கக் கொடி யினரும் செவி மடுத்தார்

முந்தைத் தலைமைகளின் தவ றிழைப்பு
இந்தத் தலைமுறைக்குக் குழி பறிப்பு
எந்தத் தலைமுறைக்கும் இனிச் சிறப்பு
வந்து நிலைபெறற்கு வழி பிறப்பு

எங்கள் தமிழ் இனத்தின் விடிவு எழும்
எங்கள் தமிழ் நிலத்தில் அமைதி வரும்
பொங்கு தமிழ் எழுச்சி வலிமை தரும்
எங்கும் தமிழ் உலகில் பெருமை பெறும்

2.06.2002 வீரகேசரி வாரப்பதிப்பிலும், 31 மே-13 ஜூன் 2002 ஈழமுரசிலும் (முரசு 4- முழக்கம் 81) பிரசுரிக்கப்பட்டது

## தம்பியின் தூரமதி வென்றிடும்

எங்கணும் உலகில் ஈழத்தமிழர்
என்பது பற்றியே பேச்சு
சிங்களம் செய்த தீவினையெல்லாம்
திக்கெட்டும் தெரிந்து போச்சு
செங்களம் ஆடிய புலிகளின் தியாகம்
செகமெங்கும் அறிய லாச்சு
பொங்கிய தமிழர் புலிகளின் பின்னே
புறப்பட வேற்றுமை போச்சு

வடக்கு கிழக்கு மலையகம் சேர்ந்து
வரலா றெழுதினர் மக்கள்
இடக்கு முடக்காய் இருந்தவர் சிலரும்
இணைந்தனர் தீர்ந்தது சிக்கல்
நடக்குமா இதுவென நமட்டாய் சிரிப்பவர்
நாணி யடைகுவர் துக்கம்

அடக்கி அழித்தவர் குழப்ப நினைத்திடின்
அடைகுவர் தோல்விதம் பக்கம்
எத்தனை முறைகள் எத்தனை கதைகள்
எத்தனை தலைவர் பேசினர்
அத்தனை முறையும் அரசினர் ஏய்த்தனர்
அம்மண மாய்வெளி யேறினர்
குத்தகை முறையில் பதவிகள் பெற்று
கொள்கையை விட்டு மாறினர்
நித்தமும் உரிமை இழந்து தமிழர்
நிலத்தையும் விட்டு ஓடினர்

வல்லர சாளர்கள் வலிந்து போர் செய்தவர்
வன்னியை நோக்கியே விரைகின்றார்
நல்லது செய்பவர் நடுவராய் இருப்பவர்
நாட்டிடை சுற்றியே வருகின்றார்
அல்லது எண்ணுவோர் சூழ்ச்சிகள் பண்ணுறார்
அம்மாவும் எங்கெங்கோ அலைகிறார்
தொல்லைகள் எத்தனை நேரினும் தம்பியின்
தூமதி வென்றிடும் உணருவார்.

## தாங்குவேன் ஆயுதம்

ஆண்: என்மனம் என்னிடம் இல்லையே பெண்ணே – அது
உன்னிடம் உள்ளதா சொல்லடி கண்ணே

பெண்: என்மனம் என்னிடம் இல்லையே மன்னா – அது
உன்னிடம் உள்ளதா சொல்லுநீ கண்ணா

ஆண்: நிலவிலே உறவாடி நீயெந்தன் நிழலாகி
பொழுதெல்லாம் களிகொள்ள வேண்டும் ~உந்தன்
பூவுடல் தனைஅள்ள வேண்டும்

பெண்: கணமேனும் பிரியாது கனவிலும் மறவாது
இணையாக நாம்வாழ வேண்டும் ~ எல்லா
இன்பமும் நாம்காண வேண்டும்

ஆண்: காதலை வெல்வதும் காமனை வெல்வதும்
போரிலே நாம்வென்ற பின்பே ~ என்னைப்
போய்வரச் சொல்லுநீ அன்பே

பெண்: விடுதலை கண்டுவா வெற்றியைக் கொண்டுவா
தடையேதும் இன்றியே அன்பே ~ உந்தன்
தாலியைத் தாங்குவேன் அன்றே

ஆண்: என்னுயிர் போயிடின் உன்நினை வோடுநான்
ஈழத்தில் மீண்டும் பிறப்பேன் ~ உந்தன்
இதயத்தில் என்றும் இருப்பேன்

பெண்: இமையாது என்விழி எதிர்கொள்ளும் உன்வழி
தவறினால் உன்னுயிர் அங்கே~ நான்
தாங்குவேன் ஆயுதம் அன்றே

# தமிழ்மண்ணில் கால் பதிப்போம்

ஆண்: வாறியா என்னுடன் சேர்ந்தே
காதலியே நீ வருவாயா
சோடியாய் நாம் தமிழீழம்
போய்வருவோமே சரிதானா

பெண்: தேவையா உங்களின் கேள்வி
திருமண நாளை மறந்தாச்சா
ஆசையாய் காதலித்தோமே
அத்தனை யும்வீண் கனவாச்சா

காதலே கானல்நீரா.. ..ஆ.. ஆ..
திருமணம் இப்போ நடவாதா –இனி
வருவது இங்கே கிடையாதா

ஆண்: திருமணம் இங்குசெய்வோம்
தேன்நிலவு அங்கு செல்வோம்
இருவுடல் கலந்த இன்பம்
ஈழத்தில் அடைந்துகொள்வோம்

ஆண்: வாறியா என்னுடன் சேர்ந்தே
காதலியே நீ வருவாயா
சோடியாய் நாம் தமிழீழம்
போய்வருவோமே சரிதானா

எங்களின் ஈழம்போலே.. .. ஏ.. ஏ..
இன்னொருநாடு கிடையாதே -அதி
உன்னதநாடு கிடையாதே

பெண்: நின்றது போர் மயக்கம்
வென்றது புலி இயக்கம்
என்றுமே தமிழ் மணக்கும்
ஈழமே நமை அழைக்கும்

ஆண்: வாறியா என்னுடன் சேர்ந்தே
காதலியே நீ வருவாயா
சோடியாய் நாம் தமிழீழம்
போய்வருவோமே சரிதானா

பெண்: தேவையா இனியுங்கள் கேள்வி
சென்றிடு வோமே விரைவாக
ஆசையாய் நம்தமிழ் மண்ணில்
கால்பதிப்போமே இனிதாக

இருவரும்: எங்களின் ஈழம்போலே.. .. ஏ.. ஏ..
இன்னொருநாடு கிடையாதே -அதி
உன்னதநாடு கிடையாதே

## எழுவாய் வருவாய்

உனக்கென்று எந்த நாளுமுலகில் உழைக்கும் ஈழத் தமிழனே
நமக்கென்று தனி நாடுபெறவே
எழுவாய் வருவாய் தமிழீழம்
இன்றே மீட்டிடுவோம்

நமதுயிர் மண்ணடா ஈழம்
அதனை நீ எண்ணடா
வருக நீ இன்றடா இல்லை
வாழ்வின் பயன் என்னடா

அந்நாளிலே அரசாண்ட நாம்
அடிமைகளாய் நிலைதாழ்வதா
பின்னாளிலும் தமிழீழமண்
பிறராளவே இடமாவதா

இனியது பிழை
எழுவது முறை
வருகுது படை
விலகுது தடை

நமது நிலமும் நமது இனமும் அழிகிறதே...

தமிழ்வாழவே பலவேங்கைகள்
தமதாருயிர் தமையீந்தனர்
வரலாறிலே புகழாகினார்
நிலையாகவே அவர் வாழுவார்

அவர்வழி தனை
அறிவுடன் நினை
தமிழ்விடு தலை
தனிலுனை இணை

நமது நிலமும் நமது இனமும் அழிகிறதே...

நமை ஆளவே பிறர் தேவையா
தமிழ் ஈழமே கனவாவதா
நனவாகியே உருவாகிட
நடைபோடவே படைசேருவாய்

இதுபுது யுகம்
இனியிலை பயம்
முடிவினில் ஜெயம்
விரைவினில் வரும்

நமது நிலமும் நமது இனமும் அழிகிறதே...

நமதுயிர் மண்ணடா ஈழம்
அதனை நீ எண்ணடா
வருக நீ இன்றடா இல்லை
மடிவது நன்றடா

(கலாநிதி ஜோய் மகேஸ்வரன் அவர்களால் அமைக்கப்பட்ட இசைக்கு எழுதப்பட்ட இப்பாடல் மெல்பேணில் இன்னிசைமாலை நிகழ்ச்சியில் அவரால் பாடப்பட்டது)

## புலிகளை மனதில் பொறி

அழகுதமிழ் மொழியதனை அரியணையில் அமரவிட
பழையபடி நமதுநிலம் முழுவதிலும் உரிமைபெற
களமதிலே தமதுயிரை விடுபுலிகள் நினைவுகளை
உளமதனில் அனுதினமும் உலவவிடு தமிழினமே

இனிமைதரும் இளவயதில் அழகுநிறை நினைவுகளில்
கனவுகளில் தமதுணர்வை தவழவிடும் பருவமதில்
தமிழுரிமை தனையடையும் பொதுநலனில் உயிரைவிடும்
புலிமறவர் தியாகமதைப் பொறிமனதில் தமிழினமே

## புலிகளைமீறி ஓர்செயலா?

கடலலை இரையுது கரும்புலி விரையுது
பகைவரின் படையணி பதறுது சிதறுது
கொடியவர் குருதியில் கொடுமைகள் கரையுது
புலிகளின் நடையினில் விடுதலை தெரியுது

உலகே புதிதாய் உருமாறுமே
ஈழம் அன்று எமதாகுமே
பலநாள் கனவு நனவாகுமே
புலியால் விடிவு நமதாகுமே

அந்நிய ராணுவம் செந்தமிழ் மண்ணினை
ஆக்கிர மித்தது முறையா
சன்னதம் கொண்ட விடுதலை வீரர்கள்
தம்முயிர் ஈந்தது கதையா

திடுதிடு மெனநிலம் அதிரட விரைவது
விடுதலைக் கரும்புலிப் படையா
சடசட வெனப்புலி மறவரின் வெடிகளில்
சரிவது பகைவரின் உடலா

தாயிலும் சேயிலும் தம்வெறி தீர்த்திடும்
காமுகர் மாள்வது தவறா
தாயிலும் நல்லதோர் தலைவனைப் பெற்றநம்
தமிழினம் சோர்வது முறையா

எங்கள் இனத்தினை எங்கள் நிலத்தினில்
எதிரிகள் கொல்வது சரியா
பொங்கிய மூச்சுயி ராயுதம் தாங்கிடும்
புலிகளை மீறியோர் செயலா

**(இப்பாடல் மெல்பேணில் இன்னிசைமாலை நிகழ்ச்சியில் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் அவர்களால் இசையமைத்துப் பாடப்பட்டது)**

## தமிழீழம் மலரும்

இசை: காம்போதி தாளம்: ஆதி

தமிழீழம் தனியாக தரணியில் உருவாகும்
திருநாளும் விரைவாய் வரும் - அந்தத்
திருநாளும் விரைவாய் வரும்

மாவீரர் போராடியே - தமிழீழம்
மலரவ ழிகோலினர்
சாவையெ திர்கொண்டனர் - தமிழ்மக்கள்
வாழத் தமை ஈந்தனர்

தரையிலும் ஆழக் கடல்நிலைகளிலும்
எதிரியின் கொடிய களமுனைகளிலும்

எதிர்கொண்டு பகை
வரை வென்று தம
துயிர் தந்த கரும்
புலி வீரர்

உலக முள்ளளவும் நிலையாக
தமிழ ருள்ளமதில் அவர் வாழ
பலதி சைகளிலும் புகழ்ப ரந்துபுலி
கொடிப றக்குமொரு அழகான

( தமிழீழம் தனியாக )

தமிழ்வீரர் போராற்றலும் ~ தேசீயத்
தலைவர்வ ழிகாட்டலும்
அறமான போராட்டமும் ~ வெற்றிக்
கொடியைநி லைநாட்டிடும்

வளம்நி றைந்தநம் தமிழ்நில முலகில்
தலைநி மிர்ந்துதனி நாடாகி

கல்வி யும்உயரும்
செல்வ மும்பெருகும்
கலைக ளும்வளரும்
பல நாடும்

ஈழம் ஈழமென நட்போடு
தோழமை கருதி உறவாடி
எமது பொருள்பெற்று தமது பொருள் தந்து
உறவுடன் குலவும் வளமான

(தமிழீழம் தனியாக )

## ஈழம் மலர்ந்தது

விடுதலை வந்தது விடியல் தெரிந்தது
தமிழீழம் இன்று மலர்ந்தது

விடுதலை வந்தது விடியல் தெரிந்தது
தமிழீழம் இன்று மலர்ந்தது

விடுதலைப் புலிகளின் தியாகமிது
விடுதலைப் புலிகளின் தியாகமிது

நித்தமும் நிலைபெறும்
அற்புத வெற்றியிதே

(விடுதலை..)

யாழ்ப்பாண (இ)ராச்சிய முழுநிலமும்
வன்னியும் மன்னார் பெருநிலமும்
மட்டுநகர் எனும் மாநிலமும் –திரு
மலையும் அம்பாறையும் சேர்ந்திடவே

ஈழமாய் ஒருகொடியில் வந்ததுவே
தாயகம் நமதாயானதுவே

புலிக்கொடியினைத் தமிழால்
புகழ்ந்தேற்றுவோம் வாழ்த்துவோம் போற்றுவோம்
உலகினில் தமிழின
விடுதலை வந்தது விடியல் தெரிந்தது
தமிழீழம் இன்று மலர்ந்தது

இந்துவும் கிறீஸ்தவர் பௌத்தரென்றும்
இஸ்லாம் என்றிடும் பேதங்களும்
உயர்ந்தவர் தாழ்ந்தவர் சாதிகளும் -பணம்
உள்ளவர் வறியவர் பேதங்களும்

இல்லையே என்றநிலை வந்ததுவே
எல்லாம் சமமாயானதுவே

உளத்தி லொன்றாயானோம்
ஒன்றுகூடுவோம் பாடுவோம் ஆடுவோம்
உலகினில் தமிழின
விடுதலை வந்தது விடியல் தெரிந்தது
தமிழீழம் இன்று மலர்ந்தது

எங்கள் தமிழீழம்
எங்கள் தமிழீழம்
நாம் ஆள ஒரு நாடுண்டு
நமை ஆள இனி யாருண்டு
எங்கள் தமிழீழம்
எங்கள் தமிழீழம்

## மாவீரர்கள்
(கவிதையும் காட்சியும்)

**கட்டியம் கூறல் / முன்னுரைமொழிவு**

முன்னாளில் முடிசூடி அரசாண்ட மூவேந்தர்
முரசறைந்து போர்செய்த வரலாறு படித்ததுண்டு
கண்ணாலே அதுபோலக் கண்டதுண்டா?

புராணத்தில் இதிகாசத்தில் புலவர்கள் விதந்துரைத்த
போரெல்லாம் வாசித்து வாசித்து வியந்ததுண்டு
புனையாத போர்ச் செய்தி அறிந்ததுண்டா?

பெருஞ்சேனை மோதியதும் பிணக்காடு நாறியதும்
பெருங்கதையாய் கற்பனையாய் நேற்றுவரை இருந்ததுண்டு
ஈழப்போர் கற்பனையில் நிகழ்ந்த ஒன்றா?

பலநாட்டு உதவியுடன் படைநடத்தும் எதிரியினை
தனிப்படையாய் பலமிழக்கச் செய்தகதை கேட்டதுண்டா
புலிப்படைபோல் உலகிலென்றும் இருந்ததுண்டா?

பதினேழு ஆயிரம் இளையோர்கள் உயிரீந்து
மொழியோடு மண்மீட்ட வரலாறு முன்னருண்டா
இதுபோல எங்கேனும் நடந்ததுண்டா?

பதினாறு வயதினிலே முடிசூடி அரசாண்டோர்
கதைகளி லேதானுண்டு அவ்வயதில் இனம்காக்க
படையமைத்து வழிசமைத்த தலைவனுண்டா?

உலகத்தில் தமிழ்வேந்தர் பலநாட்டில் ஆண்டதுண்டு
உலகத்துத் தமிழரெல்லாம் உயிராக மதிக்கின்ற
ஒப்பற்ற ஒரேதலைவன் இருந்ததுண்டா?

வல்லரசு நாடுகளும் மதிப்பளித்து உன்னிப்பாய்
மாவீரர் தினஉரையைச் செவிமடுக்கும் நிலைபோல
சொல்லவல்ல தலைமையொன்று வேறுண்டா?

அத்தனை சிறப்போடு இனத்திலே விருப்போடு
அன்னையாய் தந்தையாய் அண்ணனாய் தம்பியாய்
இத்தனை வருடமாய் மொழியையும் நிலத்தையும்
இனத்தையும் காக்கிறான் எம்முயிர்த் தலைவனாய்

## தேசியத்தலைவர்

மன்னவன் போலொரு வல்லவன் தோன்றினான்
மாபெரும் புலிப்படை ஆக்கினான்
எண்ணருங் காரியம் ஆற்றினான் தமிழரின்
இதயங்களில் தன்னை ஏற்றினான்
மண்ணொடு மொழியொடு மக்களைக் காக்கவே
வாழ்கிறான் தன்னை ஈய்கிறான்
திண்ணமாய் வெற்றியை ஈட்டுவான் உலகிலே
செந்தமிழ்த் தனிக்கொடி நாட்டுவான்

ஆழக்கடலையும் ஆளப்பிறந்தவன்
ஈழத் தமிழரின் இன்னுயிர் முதல்வன்
காலத்தவத்தில் கருவான தலைவன்
போருக்கு இலக்கணம் எழுதிய மறவன்

## மாவீரர்கள் (பொது)

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாள்போற்ற அழைக்கின்றோம்

எதிர்கொண்ட பகைவரைப் புறங்கொள்ள வைத்திட
இன்னுயிர் தமைஈந்த வர் – எங்கள்
அறங்கொண்ட தலைவனின் ஆணையின் திசையிலே
அம்பாகி உயிர்நீத்த வர்

அந்த –

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

கடலிலே பகைவரின் கப்பலை மோதியே
காற்றோடு கலந்திட்ட வர் ~ தங்கள்
உடலிலே குண்டோடு எதிரியின் பாசறை
உள்ளேசென் றொளியான வர்

அந்த ~

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

தமிழீழ விடுதலை யொன்றிலே தங்களின்
குறியாக வாழ்ந்திட்ட வர் ~ இன்பத்
தமிழீழ மக்களின் நெஞ்சிலே என்றுமே
நிலையாக வாழ்கின்ற வர்.

அந்த ~

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

## கரும்புலிகள் (தரை)

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

பாரிய வண்டியை மில்லர் செலுத்தினான்
படையினர் முகாமிலே மோதி நிறுத்தினான்
நேரிய போர்தனில் தன்னை விழுத்தினான்
போரியல் வாழ்விலோர் புதுமை புகுத்தினான்

விரும்பியே தமையீந்து விடுதலைக்காய்
வித்தாகிப் போகின்ற கரும்புலிகள்
அரும்பான இளமையிலே தலைவனிடும்
ஆணைக்காய் ஏங்குகின்ற அருமணிகள்
பெருஞ்சேனை யாகவந்த எதிரிகளை
பிணக்குவிய லாக்கியநம் தவமணிகள்
இரும்பன்ன உறுதியொடு கடைசிவரை
இருந்துதம்மை ஈந்திட்ட உயிர்மணிகள்

இலக்கினை நோக்கியே சிரித்துநிற்பார்
இரவென்ன பகலென்ன விழித்திருப்பார்
இலட்சியம் ஒன்றையே நினைத்திருப்பார்
இதயத்தில் ஈழத்தைப் பதித்திருப்பார்
தமக்கென்ற ஆசைகள் நீத்திருப்பார்
தலைவனின் ஆணைக்கே காத்திருப்பார்
கனக்கின்ற ஆயுதம் சுமந்திருப்பார்
கடைசிநாள் தலைவரோ டமர்ந்திருப்பார்

மாவீரராகியே கரும்புலிகள் தமிழ்மக்கள்
மனங்களிலே நிறைந்திட்டார்
சாவினையே எதிர்கொண்டு தமையீந்து
சாகாது நிலைத்திட்டார்
பாவிகளால் தமிழர்நிலம் உயிருடமை
பறிபோதல் தடுத்திட்டார்
தூவிடுவோம் நறுமலர்கள் அவர்பாதம்
துதித்திடுவோம் இதயத்தால்

## கடற் கரும்புலிகள்

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

நீலவானிலே கரும்புகை எழுந்து நிலவையும் மறைத்தது
ஓலமிடும் கடல்அலையும் ஒருகணம் ஓசையை மறந்தது
ஆழக்கடலில் மோதல் அதிர்ந்தது அகிலமே வியந்தது
ஈழத்தமிழன் பெருமை உலகிலே எங்கும் பரந்தது

படகிலே சீறிப் பறந்தனர்
பாரிய கப்பலில் விரைந்தனர்
எதிரிகள் ஓடி ஒழிந்தனர்
எதிர்த்தவர் மோதி மடிந்தனர்

காற்றையும் எதிர்த்தனர் கடலையும் கிழித்தனர்
நாற்புறமும் கடல் நடுவிலே விழித்தனர்
ஏற்றதோர் தலைவனின் எண்ணத்தை மதித்தனர்
சீற்றமாய் எதிர்ப்படை அழித்தனர் சிரித்தனர்

வியத்தகு அறிவியல் நுட்பங்கள் தாங்கி
வெளிநாட் டுதவியில் கப்பல்கள் வாங்கி
பலத்துடன் அரசாங்கப் படையினர் வந்தார்
பரிதவித் தார்கடல் நீரிலே வெந்தார்

பாரிய கப்பல்கள் புலிகளைத் தேடுமே
பக்கத்தே வான்படை வட்டமிட் டோடுமே
வீரக்க ரும்புலி நேரே எதிர்க்குமே
வெற்றி படைத்துத்தம் உயிரைக்கொடுக்குமே

இம்மென்னும் முன்னே தம்முயிர் நீத்து ஈழமண் காத்தனர்
நம்கடல் எதிரியின் கண்படுமுன்னே நாடியே தாக்கினர்
செந்தமிழ் மக்கள் சிந்தையில் என்றும் சித்திரம் ஆயினர்
வந்தனைக் குரியமா வீரர்களாயினர் வணங்கிநிற்போமே

## வேவுப்புலிகள் / உளவுப் படைகள்

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

விடுதலைப் படைகளின் விழிகள்
வேவு பார்க்கின்ற புலிகள்
சுடுபடைக் கலன்களின் வழிகள்
எதுவெனச் சொல்கின்ற அணிகள்
கடும்வலைக் கம்பிச் சுருள்கள்
காப்பரண் மின்சார நிலைகள்
கொடும்பகை முகாம்களின் தடைகள்
கூர்ந்தவை தானிக்கும் படைகள்

காட்டிலும் மேட்டிலும் கடந்துசெல்வார்
கடும்புதர் களினூடே நுழைந்து செல்வார்
ஓட்டமும் நடையும் ஊர்ந்தும் செல்வார்
ஒருசில இடங்களில் ஒழிந்து செல்வார்

கொட்டும் கடுமழைக் குளிரையும் நோக்கார்
கொழுத்தும் சுடுமணல் வெயிலையும் நோக்கார்
எட்டுத் திசையிலும் தடயங்கள் பார்ப்பார்
எதிரியின் பாசறை இரகசியம் சேர்ப்பார்

எதிரியின் குண்டுகள் வந்து பாயும்
எடுத்தடி வைக்கையில் வெடிகள் சீறும்
அதிபயங் கரஊர்தி குண்டு போடும்
அத்தனைக் குள்ளும்புலி வேவு தேடும்

எத்தனை போர்களை வென்றனர் புலிகள்
எல்லாமே உளவுப் படைகளின் குறிகள்
அத்தனை உயர்ந்த தலைவனின் நெறிகள்
அதனால் சிறந்தது உளவினர் அணிகள்

உளவுப் பணியிலே உயிர்ந்த மறவர்கள்
உலகமே போற்றிடும் உன்னத வீரர்கள்
அளவில் சிறியதோர் தமிழீழத் திறமைகள்
அகிலமே அறிந்திடத் தமையீந்த தீரர்கள்

மண்ணினைக் காக்கவே மறைந்து வாழ்ந்தார்
வனத்திலும் மாற்றானின் இடத்திலும் ஊர்ந்தார்
மண்ணிணுக் காகவே மாவீரரா கினார்
மக்களின் மனக்கோயில் தெய்வமா யாகினார்

## மகளிரணி

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தலைமையீந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

புதுமைப் பெண்ணைக் கனவாய்த்தனது
பாட்டிலே நினைத்தவன்
இந்தியத் தேசியக்கவிஞன்

புதுமைப் பெண்ணை நனவாய்ஈழ
நாட்டிலே சமைத்தவன்
தமிழீழத் தேசியத்தலைவன்.

எங்களின் தமிழீழ மங்கையர் படையணி
சங்கது முழங்கிச் செங்களம் ஆடுது
சிங்கப் படையெலாம் சிதறிடப் பதறிட
பொங்கி எழுந்தெதிர் கொண்டே பொருதுது.

நஞ்சு மாலையை கழுத்தினில் அணிந்தனர்
நெஞ்சில் தமிழீழ விடியலை நினைந்தனர்
வெஞ்சமர் புரிந்திட களத்தினில் விரைந்தனர்
விஞ்சு வாரின்றி வீரப்போர் புரிந்தனர்

பெறுவதும் சுமப்பதும் சமைப்பதும் மட்டுமே
பெண்களின் பணியென்ற பிற்போக்கை மாற்றினர்
விடுதலை பெறுவதும் புதுமைகள் சமைப்பதும்
வெற்றிகள் சுமப்பதும் பெண்ணென்று காட்டினர்

தமிழீழ விடுதலைப் போரிலே பெண்களின்
தனியான வரலாறு நிலையாகப் படைத்தனர்
தமிழீழப் பண்பாட்டில் ஆண்களும் பெண்களும்
சமமென்று உலகோர்க்கு அழகாக உணர்த்தினர்

புறநாநூற்றை மறந்திடச் செய்கின்ற வலிமை
புதுநாநூறு எழுதிட வைக்கின்ற புதுமை
பிறநாடெல்லாம் வியந்திடச் செய்கின்ற திறமை
பெண்கள்இனமே உயர்ந்திட வைக்கின்ற பெருமை

பலநூறு பெண்புலி வீரர்கள்
பார்போற்ற மாவீரர் ஆகினர்
நிலையாகத் தமிழ்மக்கள் நெஞ்சினில்
நீடித்த நினைவாகிப் போயினர்
தமிழீழ மண்ணினை தெய்வமாய்
தவறாது காக்கின்றோ ராயினர்
மலராலே அவர்பாதம் வணங்குவோம்
வாழ்த்துவோம் வந்தனை செய்குவோம்.

## பொதுமக்கள் படை

மாவீரர் புகழ்பாட வாருங்கள் என்றுதமிழ்
மக்களை அழைக்கின்றோம்
தாமாகத் தமைஈந்து தமிழ்காத்த தெய்வங்கள்
தாழ்போற்ற அழைக்கின்றோம்

புலிகள் மட்டும் போராடி நின்றனர்
புலம்பெயர்ந்து பலமக்கள் சென்றனர்
மண்ணில்வாழ்ந்த மக்கள்திடம் கொண்டனர்
வரலாற்றினை மாற்றவழி கண்டனர்

அருகிருந்து பார்த்தநிலை விட்டனர்
அகதிகளாய் ஓடுவதும் விட்டனர்
புலிகளோடு சேரத்தலைப் பட்டனர்
பொதுமக்கள் படையணியைக் கட்டினர்

மாவீரர் தியாகங்களைக் கண்டதால்
மாற்றார்படை தமிழர்களைக் கொன்றதால்
சாகப்பயம் இல்லையென்று சென்றனர்
தம்பிகளோடு துணைப்படையாய் நின்றனர்

புலிகளோடு சேர்ந்துநின்றார் போர்க்களம் சென்றார்
புறமுதுகு காட்டியெதிரி ஓடிடக்கண்டார்
எலிகளல்ல நாங்களென்றார் எல்லையில் நின்றார்
எதிர்த்தவர்கள் நிலைகுலைந்தார் இன்னலடைந்தார்

வயதுசென்ற முதியவரும் வலியவே வந்தார்
வாலிபர்போல் ஆயுதங்கள் தாங்கியே நின்றார்
பயமின்றிநம் பெண்கள்பல நூறு இருந்தார்
வளைந்துகுனிந்து நிமிர்ந்தேபோர்ப் பயிற்சியும் செய்தார்

பொதுமக்கள் படையென்றார் புறப்பட்டுச்சென்றார்
புலிகளுக்குத் தோள்கொடுத்தார் புதுமைபடைத்தார்
இதுகண்டார் தமிழரெல்லாம் இணைந்து நடந்தார்
எதிரிகளோ பயந்து நடுங்கி இறங்கியே வந்தார்

எல்லையிலே நின்றவரும் மாவீரரானார்
ஈழமண்ணைக் காப்பதிலே காவியமானார்
உள்ளளவும் மனிதரிந்த உலகத்திலே
ஒளிர்ந்திடுவார் தமிழினத்தின் இதயத்திலே

**(இக்கவிதைகள் 07.12.2002 இல் மெல்பேணில் நடைபெற்ற மாவீரர் நிகழ்வில் 'கவிதையும் காட்சியும்' என்றபெயரில் திரைப்படக் காட்சிகளோடு இடம்பெற்றன)**

## மாவீரர் புகழ் பாடுவோம்

மாவீரர் புகழ் பாடுவோம் – தமிழ்
மறவர்கள் தமிழீழம் மலரவே
தம்முயிர் ஈந்த நம்
மாவீரர் புகழ் பாடுவோம்

எதிர்கொண்ட பகைவரைப் புறங்கொள்ள வைத்திட
இன்னுயிர் தமைஈந்த வர் – எங்கள்
அறங்கொண்ட தலைவனின் ஆணையின் திசையிலே
அம்பாகி உயிர் நீத்தவர்
(மாவீரர்..)

கடலிலே பகைவரின் கப்பலை மோதியே
காற்றோடு கலந்திட்ட வர் – தங்கள்
உடலிலே குண்டோடு எதிரியின் பாசறை
உள்ளேசென் றொளியானவர்
(மாவீரர்..)

தமிழீழ விடுதலை யொன்றிலே தங்களின்
குறியாக வாழ்ந்திட்ட வர் – இன்பத்
தமிழீழ மக்களின் நெஞ்சிலே என்றுமே
நிலையாக வாழ்கின்ற வர்.
(மாவீரர்..)

**(மாறுபட்ட பல்லவியோடு கவிதையாக வேறோர் இடத்திலும் இப்பாடல் இடம்பெற்றுள்ளது)**

## ஈழத்துக் கண்ணகிகள்

### நாட்டிய நாடகம்

(அவுஸ்திரேலியா மெல்பேணில் நிருக்தக்ஷேத்ரா நாட்டியப்பள்ளியினரால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட ஈழத்துக்கண்ணகிகள் என்னும் நாட்டிய நாடகத்தில் நடனங்களின் முன்னால் அறிமுக விபரித்தலாக இடம்பெற்ற கவிதைகள்)

காட்சி I

கண்ணகி வரவு

காவலன் தவறினால் சாவினைத் தழுவிய
கோவலன் மனைவி நானே
பாதகம் நேர்ந்தது நீதியும் சாய்ந்தது
பாண்டியன் சபையில் தானே
விதியென்று சொல்வதா கதியிது அல்லவா
பதியின்றி நான் வாழ்வதா?
நெறிகெட்ட மதுரையும் அழியட்டுமேயென
அறமிட்ட நீதி தவறா?

தாயினம் இனிமேலும் தீயரால் துன்புறின்
தாங்காது தமிழர் இனமே
ஆயிர மாயிரம் கண்ணகி கள்ளுலகில்
தோன்றுவர் இனம் வாழவே
ஆயுதம் ஏந்துவர் போர்களில் நீந்துவர்
அகிலமே புகழ் பேசுமே
தீயிலே மதுரைபோல் தீயவர் ஊரெலாம்
வேகுமே தமிழ் வாழுமே

காட்சி 2

**ஈழத்துக் கண்ணகி 1**

இவளொரு பெண்மணி ஈழத்துக் கண்ணகி
இன்தமிழ் பேசிடும் எழிலான சுந்தரி
தமிழ்மானம் காத்திட கனமான ஆயுதம்
தன்கையில் ஏந்திய களமாடும் கண்ணகி

கல்வியில் உயர்ந்தாள் கலைகளில் சிறந்தாள்
கல்லூரி மாணவர் திலகமாய்த் திகழ்ந்தாள்
பல்கலை பயின்றாள் பலரையும் கவர்ந்தாள்
பட்டங்கள் பெறும் இன்பக் கனவிலே மிதந்தாள்

சிறீலங்கா இராணுவம் புகுந்தது
செந்தமிழ் ஈழம் அழிந்தது
வெறிகொண்டு தமிழரைக் கொன்றது
விதியோடு விளையாடி நின்றது

வீடுகள் செந்தீயில் எரிந்தன
வீணரால் பள்ளிகள் சிதைந்தன
ஓடியோர் குண்டுபட் டிறந்தனர்
உள்ளேயும் பலர்வீட்டோ டெரிந்தனர்

இந்தநிலை கண்டஇவள் தன்கனவை மறந்தாள்
சொந்தநிலம் காக்கவெனச் சொந்தங்களைத் துறந்தாள்
அந்தவழி சென்றுபகை வென்றுவர முனைந்தாள்
செந்தமிழர் மண்ணிலொரு கண்ணகியாய்த் திகழ்ந்தாள்
(இவளொரு பெண்மணி)

## ஈழத்துக் கண்ணகி 2

இவளொரு பெண்மணி ஈழத்துக் கண்ணகி
இன்தமிழ் பேசிடும் எழிலான சுந்தரி
தமிழ்மானம் காத்திட கனமான ஆயுதம்
தன்கையில் ஏந்திய களமாடும் கண்ணகி

வரலாறு காணாத அவலம்
வந்ததே தமிழர்க்குத் தொண்ணூற்றி ஐந்தில்
பலலட்சம் பேர்பட்ட துயரம்
மழையிலே நடையாக இரவிலே சென்று
அகதியாய் வீதியில் உழலும்
தமிழீழம் அழுததே கண்ணீரில் வெந்து
நரகமே வாழ்வான பிறகும்
படையினர் கொன்றனர் முகாமிலே வந்து

அகதியாய் நின்றஇவள் பார்த்தாள்
அந்தோ ஈதென்ன அநியாயம் என்றுடல் வேர்த்தாள்
அகதிகள் முகாமினை நீத்தாள்
அவளோடு தோழிகள் பலரையும் ஒன்றாகச் சேர்த்தாள்
தமிழீழப் புலியோடு சேர்ந்தாள்
தமிழர்க்கு விடிவொன்று காண்பதே சரியென்று ஓர்ந்தாள்
விடுதலைப் போர்முறை தேர்ந்தாள்
வேங்கையா னாள்ஈழக் கண்ணகி யாகவே மீண்டாள்

### ஈழத்துக் கண்ணகி 3

இவளொரு பெண்மணி ஈழத்துக் கண்ணகி
இன்தமிழ் பேசிடும் எழிலான சுந்தரி
தமிழ்மானம் காத்திட கனமான ஆயுதம்
தன்கையில் ஏந்திய களமாடும் கண்ணகி

தடைமுகாம் பலநூறு வந்தன
தமிழனின் வாழ்வுக்குத் தடைபோட்டு நின்றன
படையினர் சோதனை செய்தனர்
பணத்தையும் தமிழீழ இனத்தையும் கொய்தனர்
அடையாள மின்றியே கொன்றனர்
அறியாத சிறுமிகள் கற்பையும் தின்றனர்
கொடுமைகள் கண்டிவள் ஏங்கினாள்
கோலத்தை மாற்றினாள் சீருடை தாங்கினாள்

காட்சி 3

**(ஈழத்துக் கண்ணகிகள் மூவரும் ஒன்றாகச் சேர்ந்து)**

கொலைவெறி கொண்டபடை
தமிழரைக் கொன்றுவிட
சிலையாக நாம் நிற்பதா?

அழகிய எங்கள் நிலம்
எதிரியின் தங்குமடம்
ஆவதா அதை ஏற்பதா?

புலிகளை வெல்ல ஒரு
படையிந்த உலகிலே
இலையென்று பறைசாற்றுவோம்

மலைநிகர் எம்தலைவர்
வழியிலே சென்றுதமிழ்
நிலமெலாம் எமதாக்குவோம்

**(கண்ணகி சிலையாக நிற்க, ஈழத்துக் கண்ணகிகள் மூவரும் ஆடுகின்றனர்)**

## கோர நிகழ்வுகளும்
## சோக நினைவுகளும்.

வாழத்துடிக்கின்ற ஈழத்தமிழனத்தின் வரலாற்றில் ஆழப்பதிந்துவிட்ட காலச் சிதைவுகளை ஏற்படுத்த ஈழத்தமிழ்மண்ணில் இந்திய இராணுவம் 'அமைதி' யாய் காலைப்பதித்திட்ட ஜீலைத்திங்கள் எண்பத்தியேழு.

பதினாறு ஆண்டுகள் பறந்து போயிற்று
பாரதப் படையும் மறந்து போயிற்று
செத்தவர்கள், மறைந்தவர்கள், சீரழிந்து போனவர்கள்
சொத்தை இழந்தவர்கள் சோகம் மறையவில்லை.

கடந்த நினைவுகள் பசுமையானவை
நடந்த நிகழ்வுகள் கொடுமையானவை
அடைந்த விளைவுகள் துயரமானவை
சிதைந்த வாழ்வுகள் நிகரில்லாதவை.

பங்காளியில்லாத ஒப்பந்தம்
பாரினிலே இதுபோல நடந்ததில்லை.
தங்களது ஆளுமையை நிலைநிறுத்த
ராஜீவும் ஜேயாரும் செய்தவினை.

கையொப்பம் இட்ட 'மை' காயு முன்பே
காத்திருந்த அமைதிப்படை பாய்ந்தங்கே
நல்வரவு சொன்னார்கள் செந்தமிழர்
நாதியற்றோம் என்றழுதார் சிங்களவர்.

பாரதம் நமது மூதகம் என்பதால்
படையினர் நமக்கு சாதகம் என்றுநாம்
வீறுடன் நெஞ்சிலே கனவுகள் விதைத்தோம்
விபரீத மாகிடும் என்றா நினைத்தோம்.

வந்தாரை வரவேற்கும் வழமையோ டவரைநம்
சொந்தமாய் நினைத்தோம்
செந்தென்னை இளநீரும் தேனோடு தயிர்கலந்து
தெவிட்டாமல் கொடுத்தோம்

உள்ளளவும் நினைப்பதற்கு உப்பிட்டு மோர்கடைந்து
உவப்போடு கொடுத்தோம்
சுள்ளெனவே மிளகாயின் சுவைசேர்த்த சம்பலுடன்
சுடுகிழங்கும் கொடுத்தோம்

பாசமுடன் வீதியெங்கும் படையினரை வரவேற்று
வாசலிலே நிறைகுடமும் வனப்புமிகு தோரணமும்
ஆசையுடன் பாட்டிகளின் ஆராத்தி வாழ்த்துக்களும்
நேசமதைக் காட்டியது நினைவில் இன்னும் நிற்கிறது.

பாரதப் படையின் பாரிய வண்டிகள்
பாதை நெடுகிலும் பவனியாய் வந்தன
ஓரம் இரண்டிலும் கூடினர் மக்கள்
ஓடி மறித்தனர் உவகையில் களித்தனர்

வளவுகள் எங்கணும் காய்த்துக் குலுங்கிய
அழகிய செம்மஞ்சள் இளநீர்க் குலைகளை
மளமள வென்றே மண்ணில் விழுத்தி
வடிவாய்ச் சீவி மகிழ்ந்தே கொடுத்தனர்

இளநீரைக் குடித்தபின் இரண்டாகபிழந்து
இதமாக உள்ளே இருக்கின்ற வழுவலை
உளமார கேட்டவர் உருசித்துத் தின்றதும்
உறவாக நினைத்தனர் உருகி மகிழ்ந்தனர்

இந்த வரவேற்பு எதைக்காட்டி நின்றதங்கே
நொந்து கிடக்கின்ற நம்வாழ்வை மீட்டெடுக்கத்
தந்து உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழவைக்க
வந்த உறவென்று நம்பியதைக் காட்டியது.

அப்பாவித் தமிழ்மக்கள் அன்று நினைத்ததில்லை
தப்பாகி எல்லாமே தலைகீழாய்ப் போகுமென்று
வெட்டக் குலை இளநீர் வீழ்ந்து சிதறுதல்போல்
சுட்டுத் தமிழ் இனமே சுருங்குமென நினைத்ததில்லை

எந்த மரங்கள் இளநீரைத் தந்தனவோ
அந்த மரங்கள் அடியோடு சாயுமென்றோ
வந்த படையினரால் வாழ்விழந்து போகுமென்றோ
அந்த மனங்களுக்கு அந்நேரம்தெரியவில்லை.

நெற்றியிலே குங்குமமும் நீண்ட கருமுடியில்
கொத்தாக மல்லிகையும் கோர்த்தகன காம்பரமும்
முற்றத்தில் நிறைகுடமும் முகத்திலே புன்சிரிப்பும்
அத்தனையும் கொண்டு மக்கள் ஆவலுடன் வரவேற்றார்

நெற்றியிலே பொட்டழியும் நீண்ட தலைமயிரைப்
பற்றியிழுத்து அந்தப் பாவிகளால் உடல் கிழியும்
முற்றத்திலே கணவன் மூச்சுநிற்கும் என்றெல்லாம்
சற்றுமெதிர் பார்த்ததில்லை சந்தேகம் கொண்டதில்லை.

பொட்டோடு பொலிந்து நின்றார்கள் படைவந்த போது
பொட்டை இழந்து நின்றார்கள் அது சென்றபோது.

பள்ளிசெல்லும் போதெல்லாம் பாலகர்கள் தவறாமல்
பாரதப் படையினரின் பக்கத்தில் சென்றார்கள்
இந்திமொழி வார்த்தைகளில் இரண்டொன்றை அவர்களிடம்
முந்திப் பொறுக்கிப்புன் முறுவலுடன் உச்சரித்தார்.

பள்ளிக்குள் வந்துதம் உயிரைப் பறிப்பார்கள்
கொள்ளி அடுக்குதல்போல் குவித்து எரிப்பார்கள்
என்றந்தப் பிஞ்சுகளோ எள்ளளவும் நினைத்ததில்லை
அன்று நினைப்பதற்கு அவர்வயதும் போதவில்லை.

திருவிழாச் சோடனையை சென்றுபார்த்து மகிழ்வதுபோல்
உருவாகும் முகாம்களெல்லாம் ஊர்மக்கள் பார்த்து உவந்தார்
ஆற்றொணாத் துயரில் தம்மை ஆழ்த்துதற்கு வந்திருக்கும்
கூற்றுவர் படையதென்று கொஞ்சமும் நினைத்ததில்லை.

தமிழர்களைக் காக்கவென்று வந்து சேர்ந்தார்
தடம்புரண்டார், எண்ணத்தில் விடம் கலந்தார்
எமதின்னல் களைவதற்கே வந்தோம் என்றார்
இரண்டரையே மாதத்தில் எதிரி யென்றார்

ஆம் என்றால் சுட்டார்கள்
இல்லையென்றால் எரித்தார்கள்
ஏன் என்று கேட்டிட்டால்
இரவிலே கடத்தினார்கள்.

வானரம் முன்புமொன்று வந்தது
வனப்புமிகு இலங்கையை அழித்தது
சேனையாய் இப்போது வந்தது
செந்தமிழ் ஈழத்தைச் சிதைத்தது.

வீடுகள் செந்தீயில் எரிந்தன
வீதிகள் தடைபோட்டு சிதைந்தன
ஓடினோர் குண்டுபட்டிறந்தனர்
உள்ளேயோ பலர் வீட்டோடெரிந்தனர்.

கோயிலில் கும்பிட்டு நின்றனர்
கும்பலாய் வந்தனர் கொன்றனர்
ஏனென்று கேட்டிட்ட தலைவர்கள்
இரவிலே காணாமல் போயினர்

கற்புடல் சிதைந்தவள் சிதறினாள்
கணவனை இழந்தவள் பதறினாள்
கற்புடல் கணவன்முன் சிதைந்தவள்
கடவுளே இ(ல்)லையெனக் கதறினாள்.

தாயின்முன் தனையர்கள் சுடுபட்டனர்
தந்தைமுன் சிறுமிகள் கெடுபட்டனர்
நோயின்றி யேபெண்கள் காமுகர்
நுகர்ந்ததால் தங்களின் உயிர்விட்டனர்.

பள்ளியில் படித்தனர் மாணவர்
பாவிகள் சென்றங்கு பிடித்தனர்
மெல்லிய கைகளை மதிலோடு
விரைவாகக் கட்டியே நிறுத்தினர்.

தள்ளியே நின்றதோர் டாங்கியை
தருக்கர்கள், மதிலோடு நின்றிட்ட
அல்லிப்பூ உடல்களில் மோதினர்
அந்தந்தோ ஐயகோ அம்மம்மா.

ஒன்றாயி ரண்டா இப்படி
ஊருக்கு ஊர் வாசற்படி
அன்றைய தமிழர் நிலைப்படி
அரசுகள் செய்த குழப்படி.

இரண்டரை ஆண்டுகள் தங்கினர்
ஈழத்தைத் தடுக்கவே வந்தனர்
மிரண்டனர் இதுபோல எங்குமே
விழுந்ததே இல்லையென்று சென்றனர்.

தமிழீழ மக்களைக் கொன்றதும்
தங்களில் பலர் உயிர் இழந்ததும்
எமதீழ நாட்டினைச் சிதைத்ததும்
இறுதியில் பாடம் படித்ததும்

வரலாறு மன்னிக்க முடியாத
வடுவொன்றைப் பாரதம் பெற்றதும்
ஒருநாளும் அழியாத கறையது
'உதவினால்' மறையவாய்ப்புள்ளது.

**(29.07.1987 ஆம் திகதி இந்திய இராணுவம் தமிழீழத்தில் பிரவேசித்து இரண்டரை வருடங்கள் நிலைகொண்டிருந்தது)**

## சிறையை விதித்தது முறையா

அவலை நினைத்து உரலை இடித்த கதையா
சுவரை இடித்து மனையில் இருக்க நினைவா
நிலவை மறைக்க குடையைப் பிடித்தல் மதியா
பழமை மறந்து தலையில் பிடித்த கணமா

விறகை எடுத்து வெயிலில் பரப்ப மழையா
சிறகை ஒடித்து மயிலை விடுத்த நிலையா
சிறையை விதித்து நிலையைக் குழப்ப சதியா
அறையில் குதித்து உலகை மயக்க ஜதியா

கனவை நினைத்து நனவை மறைத்த விதமா
மனதை உடைத்து உறவைப் பதித்தல் எளிதா
சுடரை அணைத்து இருளை அகற்ற முயல்வா
இடரைக் கொடுத்து சமரை இழக்க நகர்வா

பயிரை அழித்து வெறுமை நிலத்தில் உரமா
உயிலை நினைத்து உயிரைப்பறித்தல் முறையா
தமரை அணைக்க பிறரை வருத்தல் தகுமா
சமரை நிறுத்தி சதியில் விழுத்த கணவா

எதனை நினைத்து எதனை விதித்த தெனினும்
அதனை நிறுத்தி அதனைத் திருத்த முடியும்
இதனைத் தவிர்த்து எதனைப் பிடிக்க வரினும்
அதனின் விளைவை விரைவில் உலகம் புரியும்

## பேராசிரியர் எலியேசர்

அழகான மனையாளை
அறிவான துணையாக
முழுநாளும் பெற்ற மனிதர்

பதினாறு வகையான
நிதியாவும் நிறைவாக
புவிமீதில் பெற்ற புனிதர்

உயர்வான கணிதவியல்
அரிதான சாதனையால்
உலகோர் மதித்த அறிஞர்

இனியாரும் ஒருநாளும்
அவர்போல உருவாக
முடியாது யர்ந்த தமிழர்

திசையாவும் தமிழோசை
புகவேண்டும் எனநாளும்
செயலாற்றி வந்த குரவர்

அவுஸ்திரே லியாவாழும்
தமிழர்கள் அனைவோரும்
அன்பாய் மதித்த தலைவர்

அரைவாசி வாழ்நாளில்
வெளிநாடு களில்வாழ்ந்தும்
தமிழீழ நினைவான மறவர்

தமிழீழத் தேசீயத்
தலையாய விருதினைத்
தலைவரால் பெற்றமா மனிதர்

## மாமனிதர் பேராசிரியர் எலியேசர்

ஏட்டுப் படிப்பினிலே விண்முட்டும்
இமயத்தைக் கண்டவர்
நாட்டுப்ப பற்றினிலே நம்தலைவன்
இதயத்தை வென்றவர்
ஊட்டும் கல்வியிலே உயர்கணிதத்
தேற்றம் தந்தவர்
பாட்டில் அடக்கி அவர்பெருமை
பகர்தல் எளிதாமோ?

தென்துருவத் திசையெல்லாம்
தேமதுரத் தமிழ்பரவ வித்திட்டவர்
தன்திறனைச் செலவிட்டு
தமிழ்ச்சங்கம் அமைத்துவழி செய்திட்டவர்
புன்னகையால் பொன்மனதால்
புலம்பெயர்ந்த தமிழர்களை வென்றிட்டவர்
இன்தமிழர் ஈழமதே
இலட்சியமாய் இறுதிவரை நின்றிட்டவர்

புலமை நிறைந்து பெருமை அடைந்து
புகழின் ஊச்சியில் தவழ்ந்தவர் – இனத்தின்
நிலைமை அறிந்து கடமை உணர்ந்து
உலகம் மெச்சவே எழுந்தவர்
எளிமை தவழ்ந்து செயலில் சிறந்து
எல்லோருக் கும்பணி செய்தவர் – இங்கே
வலிமை மிகுந்த தலைமை வழங்கி
வரலாற்றினையே நெய்தவர்

புலம் பெயர்ந்த தமிழர்களின்
பலம் நிறைந்த சொத்தாக வாழ்ந்தவர்
வளம் சிறந்து வாழ்ந்திடவும்
மனம் நிறைந்த கவலையிலே ஆழ்ந்தவர்
களம் தனிலே தமிழ் இளைஞர்
விழும் சமயம் வேதனையில் வீழ்ந்தவர்
உளம் அறிவு தனம் தனது
திறம் முழுதும் வாழும்வரை ஈந்தவர்

தள்ளாத வயதிலும் தமிழீழக் கோட்பாட்டில்
தளராத சிந்தையைக் கொண்டவர்
கல்லாத மனிதரின் கருத்தையும் கேட்பவர்
கவர்ந்தவர் இதயத்தை வென்றவர்
இல்லாத பொல்லாத சொன்னாலும் மாற்றாரும்
எந்நாளும் மதிக்கவே நின்றவர்
பல்வேறு நெருக்குதல் வந்தாலும் ஆற்றிடும்
பாதையில் உறுதியாய் சென்றவர்

எலியேசர் என்றமா மனிதர்பெயர்
எந்நாளும் நமக்கெல்லாம் வலிமதரும் மருந்து
எலியேசர் என்றமா மனிதர்பெயர்
ஈழத்து மக்களுக்கு அமுதத்தேன் விருந்து
எலியேசர் கணிதப்பே ராசிரியர்
என்றுமிக மதித்திடுவ ரறிவுலகோர் ருவந்து
எலியேசர் மாமனிதர் பேராசான்
இன்றில்லை கனக்கிறது இதயமெலா முடைந்து

மாட்சிமை தங்கிய மகாராணி பெயரில்
மதிப்புறு விருது ORDER OF AUSTRALIA
சாட்சியாய் அவரது சேவைக்குக் கிடைத்த
தக்கதோர் வெகுமதி

தேமதுரத் தமிழர்க்குச் செய்திட்ட பணிக்கு
மாமனிதர் விருதினை வழங்கினார் தமிழீழத்
தேசீயத் தலைவர், தெரிந்தது உலகுக்கே
பேராசிரியர் பெறுமதி.

## அன்பின் நண்ப ஜோய் மகேஸ்!

தலைவனின் ஆணையைத் தலையினில் சுமந்து
தமிழரின் அவலை மனதினில் உணர்ந்து
பலவகை அகதிகள் துயர்களை நினைந்து
பணயம் செய்கிறாய் நண்பனே தாய்லாந்து

விடியலை நோக்கியோர் வெளிச்சம் தெரியுது
கொடிதுயர் போர்க்கள நெடியது மறையுது
கடியது உன்பணி அளவிடற் கரியது
வடிவொடு செயற்றிற வாய்ப்புனக் குரியது

இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடச்சொன்ன வள்ளுவர்சொல்
திறனைச் செயலாக்கி உனக்கிந்தப் பணிவிடுத்த
மறவன் நம்மதலைவன் மாண்பை வணங்குகிறேன்

சென்றுவா வென்று சிந்தையினால் வாழ்த்துகின்றேன்
என்றும் தமிழினத்தின் இதயத்தில் இருப்பதுபோல்
நன்றே பணிமுடித்து நம்தலைவன் ஆசிபெறு
என்று வாழ்த்தியுனை இறும்பூதடைகின்றேன்

அன்புடன் நண்பன்
**பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா**

**(தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பாகப் பங்குபற்றும் நால்வரில் ஒருவராக அவுஸ்திரேலியாவில் வசிப்பவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனைத்துலக இணைப்பாளருமான திரு. ஜோய் மகேஸ்வரன் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளமையைப் பாராட்டி எட்டுநிமிடங்களில் எழுதியனுப்பிய வாழ்த்துக் கவிதை இது.)**

ஈழ முரசு

ஈழ விடுதலை வேள்வியிலே
ஈழ முரசுநெய் ஊற்றிடுதே
தேசமெல் லாம்தீபம் ஏற்றிடுதே – களச்
செய்திக ளைச்சென்று சேர்த்திடுதே

மாவீரர் தியாகங் களை – மக்கள்
அறிய வகை செய்வதும்
சாவை எதிர்கொண் டிடும் – கரும்
புலிகள் நிலை சொல்வதும்

எதிர் சென்று பகை கொன்று
உயிர் தந்து படை வென்ற
புலி நின்ற களம் கண்டு
வரு கின்ற கதை கொண்டு
உல கெங்கும் வலம் வந்து
தமிழ் பொங்கும் திசை எங்கும்
சுடர் தந்து புகழ் சிந்தும்
தமிழ் நெஞ்சங் களில் நின்று

ஈழ விடுதலை வேள்வியிலே
ஈழ முரசுநெய் ஊற்றிடுதே

சிறீலங்கா அரசாங்க மும் ~ அந்தத்
தீயோரின் கூட்டங்க ளும்
வெறிகொண்ட மதத் தேரும் ~ செய்யும்
வெளிநாட்டுப் பிரசார மும்

விலை யற்று மலி வுற்று
வலி கெட்டு விடு தற்கு
உல குக்கு நம துற்ற
நிலை பற்றி தெளி வித்து
வெறி யுற்ற படை செய்த
நெறி கெட்ட செயல் பற்றி
திற மிக்க வகை செப்பி
திசை யெட்டும் பறை கொட்டி

ஈழ விடுதலை வேள்வியிலே
ஈழ முரசுநெய் ஊற்றிடுதே

தேசீயத் தலைவன் வழி - மக்கள்
சீராக அறியும் படி
மாசத்தில் இருநாள் செய்தி - தந்து
வருமீழ முரசைப் படி

ஒளி மிக்க அறி வுக்கும்
பல மிக்க திற மைக்கும்
உர மிக்க உறு திக்கும்
இணை யற்ற கரு ணைக்கும்
பணி வுற்ற பெரு மைக்கும்
பலர் மெச்சும் தலை மைக்கும்
தமிழ் பெற்ற மக னுக்கு
பெரு வெற்றி வரு தற்கு

ஈழ விடுதலை வேள்வியிலே
ஈழ முரசுநெய் ஊற்றிடுதே
தேசமெல் லாம்தீபம் ஏற்றிடுதே - களச்
செய்திக ளைச்சென்று சேர்த்திடுதே

**(ஈழமுரசு பத்திரிகையின் அவுஸ்திரேலியப் பதிப்பின் முதலாண்டு நிறைவு விழாவில் இன்னிசையரசு திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களால் இப்பாடல் இசையோடு பாடப்பட்டது)**

## இன்பத் தமிழ் ஒலி

வரலாறு காணாத சுடர் ஒளி – அது
வண்ணத் தமிழ்பேசும்
இன்பத் தமிழ் ஒலி

மறவாதீர் நம்செலவு ஒருதுளி – அது
வளரும்நம் சமுதாயம்
தமிழ்பேச நல்வழி

தரமான பல்சுவைத் தமிழ்க் கனி – அது
தரும்சேவை இருபத்து
நான்கு மணி

இறவாத புகழ்கொண்ட தமிழ் மொழி – அது
எழிலாக இந்நாட்டில்
வளரும் இனி

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தமிழினம் ஈழத்தில் தவிக்கிறதே - பசி
தாங்காது குழந்தைகள் துடிக்கிறதே
தமிழனே அழிவதுஉன் உறவல்லவா
தயங்குதல் உதவிடத் தவறல்லவா

ஈழத்தில் இருந்து நீ வந்துவிட்டாய் -தமிழ்
இனத்தை மறந்தா இருந்துவிட்டாய்
கூழுக்கும் வழியின்றி வாடுதுபார் -தமிழ்
குழந்தைகள் நோயிலே சாகுதுபார்

உதவுவார் யாரங்கே ஒருவரில்லை -ஆள்வோர்
உதவியும் தமிழர்க்கு வருவதில்லை
புகலிடம் உடுதுணி உணவுமில்லை -தமிழர்
புனர்வாழ்வுக் கழகமின்றி உதவியில்லை

பொதுநிதி என்றுநீ கொடுப்பதெல்லாம் -வீணாய்
போகுமிடம் நமக்குத் தெரிவதில்லை
புனர்வாழ்வுக் கழகத்தில் கொடுத்தபொருள் -நேராய்
போகும் தமிழனுக்கே தயக்கமில்லை

## எப்படி வரும் சமாதானம் ?

அரசபெரும் கதிரைகளில் அமர்ந்திருப்போர் விரும்பவில்லை
முரசமின்றிப் போர்செய்யும் முப்படைக்கும் இணக்கமில்லை
துறந்துகாவி உடுத்தோர்க்குத் துளிகூடப் பிடிக்கவில்லை
பிறகெங்கே இந்நாட்டில் பிறந்துவரும் சமாதானம் ?

போரென்றால் போரென்றோர் போட்டுவைத்த முடிச்சுக்களை
ஆர்வந்தும் அகற்றாது அதைமேலும் இறுக்குகிறார்
நேர்வேயம் முடிச்சவிழ்க்க நோகாமல் முயன்றாலோ
ஆரிவர்கள் என்கின்றார் அவர்க்கெதிராய் உறுமுகின்றார்

இப்படியே தொடர்ந்திட்டால் இனமொன்று ஈழத்தில்
எப்படியும் அழிந்துவிடும் எல்லாஞ்சிங் களமாகும்
தப்பாகப் போடுகிறார் சரிவருமா இக்கணக்கு ?
இப்புவியில் அதுபோல எங்கேனும் நடந்ததுண்டா ?

சகல உரிமைகளும் தமிழர்க்கு உண்டென்று
சிகல உறுமயினர் சீறிமிக எழுகின்றார்
உலகத் தலைவர்களோ உரிமைக்கு உயிர்கொடுப்போர்
கலகக் காரரென்று வாரி விடுகின்றார்

தலைவர் என்றுசிலர் தமக்குள் சண்டையிட்டு
ரகசிய　மாய்ச்சென்று சாமரை வீசுகின்றார்
நிலைமை இதுவென்றால் ஈழத் தமிழனுக்கு
நிம்மதி யெப்போதும் நீர்மேல் எழுத்தாமோ ?

(08.07.2001 வீரகேசரி வாரமலரில் பிரசுரமானது)

## திருந்திவிடு தமிழா!

ஏனடா தமிழா!
எதற்காக இழிவாக எழுதுகின்றாய்?
எவருக்காய் பொய்யாகப் புலம்புகின்றாய்?

ஏனடா மனிதா உன் கண்கள்
இன்னுமா திறக்கவில்லை?
மானமே இல்லையா நம்மினத்தை
மாற்றான் அழிப்பதெல்லாம்
ஈனப்பிறவியே உன்மனதில்
ஊனும் எலும்புமே தான்நீயா
உணர்வற்றநீ வெறும் கூடா?

வீணாக நீசிந்தும் வியர்வையெல்லாம்
வீணருக்காய்ப் போகலாமா?
பேனாவை நீயெடுத்துப் புலிக்கெதிராய்ப்
பிழையாக எழுதலாமா?
ஏனோதா னோவென்றுநீ இருந்திடலாம்
தருமத்தைச் சாடலாமா?
காணாத பணத்தைநீ கண்டுவிட்டால்
கயமைக்கு உதவலாமா?

இலங்கையிலே பலதடவை
ஏற்பட்ட குழப்பத்தில் கலவரத்தில்
கலந்துவிட்ட குருதிகளில்
கருவுற்றுப் பிறந்திருந்தால் திருந்துவது
கஷ்டந்தான், இல்லையென்றால்
கடந்தவற்றை மறந்துவிடு திருந்திவிடு
இஷ்டம்போல் எழுதாதே
இனியுங்கால் நக்காதே நிமிர்ந்துவிடு.

## ஆதரவாளர்!

அப்பாடா!
இப்போதுதான் எனக்கு நிம்மதி
வன்னியிலிருந்து இளையக்காவின்
சின்ன மகனும் வந்து சேர்ந்துவிட்டான்

அக்காமார் அண்ணர் தங்கச்சி
பக்கத்துவீட்டுப் பரமன்
எல்லோரையும் குடும்பத்தோடு

இங்கே எடுத்துவிட்டேன்
மருமக்கள் எல்லோரும்
வந்துவிட்டார் எப்போதோ

இவனொருவன்
இளையக்காவின் மகன்தான்
இயக்கத்திற்குப் போனான்
பாழாய்ப்போய்ச் சாக இருந்தவனை
ஆளாக்க நான் பட்டபாடு

விடுதலை அது இது என்று
கடுகடுப்பாய்ப் பேசினான்
வேறு ஆட்கள் அதைப் பார்க்கட்டும்
விட்டுவிட்டு வா என்றேன்

தடுமாறினான் முதலில்
ஒருமாதிரி கழற்றி எடுத்தேன்
நிலைமாறி நின்றவனைத்
தலை மாற்றி எடுப்பித்தேன்

நெஞ்சின் ஒரு மூலையில் இருந்த
கொஞ்சக் கவலையும் பறந்துவிட்டது
நேற்று அவனும் வந்து சேர்ந்துவிட்டான்.

நாட்டு நிலைமையை நினைத்தால்தான்
நரம்பெல்லாம் முறுக்கேறுது
ஆளும் கட்சியும் மாறிப்போச்சு
அதிகாரம் என்னவோ அக்காவுக்காச்சு

ஏனிவங்கள் போரை
இப்போது நிறுத்தினாங்கள்
எதற்கு இப்போது சமாதானப்பேச்சு
ஈழம் அல்லவா எங்கள் மூச்சு

நேர்வே எதற்கு
நுழைக்கிறது மூக்கை
யாரையும் நாங்கள் நம்பக்கூடாது
போரையும் விட்டு விலகக் கூடாது

எயாப்போட்டில் நன்றாய்
இனிக்கக் குடுத்தாங்கள்
அதுக்குப்பிறகு அமைதியாய்க் கிடக்குது
அடிக்காமல் ஏன் அவகாசம் விடுறாங்கள்?
அவர்களுடன் பேசுவது அவமரியாதை
அடித்து எடுத்தால்தான் அதுமரியாதை

ஓ! மறந்துவிட்டேன்
அக்காவின் மகளுக்கு இன்றைக்கு
அட்மிசன் எடுக்கப் போகவேண்டும்
சொல்லிவைத்திருந்தேன்
நல்லாய் மறந்துபோனேன்.

## உளம் பெயர்ந்தோர்

அங்கே தமிழ் இளைஞர் உயிர் கொடுப்பார் அதைச்சொல்லி
இங்கே சில மனிதர் புகழ் எடுப்பார்
எங்கே புலிகள்படை வென்றாலும் அதுதமது
பங்கே என்பதுபோல் ஆர்ப்பரிப்பார்

ஊரிலங்கு உறவென்று இருந்ததெல்லாம் வந்திங்கே
சேரவழி செய்துவிட்டார் தம் குடும்பப்
பேரையங்கு சொல்வதற்கே யாருமில்லை வாய்வீரம்
பேசியிங்கு சண்டையங்கே வேண்டுமென்பார்

இளைஞர்படை இருந்து செயலாற்றுதற்குத் தம்வீட்டை
ஈந்துவிட்டுத் தானிங்கே வந்ததென்பார்
பலவழியில் வரவுதரும் தமதுடைமை முழுவதையும்
பாசமுடன் அவர்களுக்கே கொடுத்தோமென்பார்

புலிகள் பலர் தமக்குறவு என்றுசொல்வார் தம்வாழ்வில்
புலிவீரர் ஒருவரையும் கண்டறியார்
பலியான மாவீரர் சிலர்பேர் சொல்லித் தாமவரைப்
பாதுகாத்தடைக்கலம் கொடுத்தோமென்பார்

உண்மையிலே புலிகளுடன் இருந்தவரும் உறவுகளைக்
கண்ணெதிரே இழந்தவரும் இதுகேட்டு
புன்முறுவல் பூத்துமனம் புண்பட்டு எரிகின்றார்
பொய்யரெல்லாம் பிரமுகராய்த் திரிகின்றார்

## நடிக்கிறார்கள்

நடுநிலை நடுநிலை என்கிறார் சிலபேர்கள்
நன்னிலை தெரிகிலாதார்
நடுநிலை நடுநிலை என்கிறார் நாணிடும்
தம்நிலை அறிகிலாதார்
நடுநிலை நடுநிலை என்பதால் ஒருபோதும்
சரிநிலை தேர்கிலார்கள்
நடுநிலை நடுநிலை என்பதால் புதியதாய்
வருநிலை ஓர்கிலார்கள்

என்னென்ன என்னென்ன வகையிலே மற்றோரை
ஏழனம் செய்கிறார்கள்
என்னென்ன என்னென்ன முறையிலே மார்தட்டி
இறுமாந்து திரிகிறார்கள்
என்னென்ன என்னென்ன வகையிலே மற்றோர்க்கு
இன்னல் கொடுக்கிறார்கள்
என்னென்று என்னென்று வெளியிலே நல்லோராய்
இன்னமும் நடிக்கிறார்கள்

மண்ணென்று மண்ணென்று தம்முயிர் ஈந்தங்கு
வரலாறு படைக்கிறார்கள்
மண்ணென்று மண்ணென்று சொல்லியே வாழ்ந்திங்கு
மதிப்பைக் கெடுக்கிறார்கள்
மண்ணென்று மண்ணென்று போரிடும் மறவர்கள்
தமிழை வளர்க்கிறார்கள்
மண்ணென்று மண்ணென்று கூடிடும் சிலரிங்கு
தமிழை அழிக்கிறார்கள்

கண்டதும் கண்டதும் கையைக் குலுக்கியே
கண்ணால் சிரிக்கிறார்கள்
கண்டவர் பின்புறம் கதைகளாய்ச் சொல்லியே
புண்ணாய் வதைக்கிறார்கள்
கண்டனம் கண்டனம் செய்கிறார் என்றுதம்
பொய்யை விதைக்கிறார்கள்
கண்டனம் செய்தாரைத் தனிமையில் கண்டவர்
கால்களில் விழுகிறார்கள்

மற்றவர் மற்றவர் திறமையைக் கண்டுதம்
மனதினுள் எரிகிறார்கள்
மற்றவர் மற்றவர் திறமையை மறைக்கவே
மறைசதி புரிகிறார்கள்
மற்றவர் மற்றவர் திறமையைக் கறியிலே
வேப்பிலை யாக்கிறரார்கள்
மற்றவர் மற்றவர் மடையர்கள் என்றிந்த
மக்கள் நினைக்கிறார்கள்

இல்லாத பொல்லாத கதைகளைச் சிலர்மீது
ஏற்றியே விடுகிறார்கள்
இல்லாத பொல்லாத அதிகார மமதையில்
சேற்றை இறைக்கிறார்கள்
இல்லாத பொல்லாத சொல்வாரின் உண்மைகள்
ஈற்றிலே வெளியில் வரும்
இல்லாத பொல்லாத செய்தார்க்கே அவர்வினை
கூற்றுவன் ஆகி விடும்

என்னதான் என்னதான் இருள்சூழ்ந்த போதிலும்
இறுதியில் வெளிச்சம் வரும்
என்னதான் என்னதான் பொருள் சேர்த்தபோதிலும்
இறுதியில் நெஞ்சே சுடும்
என்னதான் என்னதான் வேடங்கள் போட்டாலும்
இறுதியில் முகம் துலங்கும்
என்னதான் என்னதான் மகிழ்வுற்ற போதிலும்
இறுதியில் மனம் கலங்கும்

சிலவேளை சிலவேளை சிற்சில பொய்களால்
சிலபேரை ஏமாற்றலாம்
சிலவேளை சிலவேளை உண்மையும் பொய்களால்
சிலகாலம் ஏமாறலாம்
சிலவேளை சிலவேளை செப்பிடும் பொய்களே
சிலபேரை வாழ்விக்கலாம்
சிலவேளை சிலவேளை தப்பலாம் ஒருநாளில்
சிதறிடும் பொய்வாழ்வெலாம்

**மங்களம்**

**நாட்டியப்பாடல்**

விக்கினங்கள் தீர்ப்பவனை மெல்பேண்
பேசினில் குடிகொண்ட வினாயகனை
வக்கிரதொண்டனென்ற பெயர்கொண்டு
வணங்குவோர்க் கருள்யானை முகத்தவனை
பக்கத்துணையா யென்றும் இருப்பவனை
பாதங்கள் போற்றுகின்றோம் மங்களமே
எக்கணமும் அருள்புரிவாய் கணநாதா
எங்களின் மங்களம்சுப மங்களமே

ஆதிசிவன்திரு மாலுடன் ஒன்றாய்
அமர்ந்தது மெல்பே ணில்
பேதமகன்று சைவர்கள் வைணவர்
கூடுவர் கரம்டவுன் ஸில்
வேதநாயகா கீதை மாதவா
பாடுகி றோம்மங்க ளம்
தாளமுடன்எம தாடல் சிறந்தது
தாழ்பணிந் தோம்மங்க ளம்

கந்தனவன் சண்சைனில் வந்தமர்ந்த வன்
முந்தைவினை யோடவரம் தந்துநின்ற வன்
சுந்தரமு டன்துணைவி (இ)ரண்டுகொண்ட வன்
வந்தனங்கள் சொல்லியவன் தாழ்பணிவோ மே

மங்களம் திருமங்களம் சுபமங்களம்
பேசின் கோயில் வக்கிரதொண்டன்
பாதம் பணிந்தோம் ஜெய மங்களம்

மங்களம் திருமங்களம் சுபமங்களம்
மாலும் சிவனும் வாழும் கரம்டவுன்ஸ்
கோயில் பணிந்தோம் அருள்மங்களம்

மங்களம் திருமங்களம் சுபமங்களம்
திருமால் மருகன் சண்சைன் முருகன்
திருத்தாள் பணிந்தோம் நல்மங்களம்

மங்களம் திருமங்களம் சுபமங்களம்
மெல்பேண் நகரின் மூன்று தலங்களின்
நல்லருள் பெற்றோம் சுபமங்களம்



## இக்கவிதை நூல் பற்றி.....

இனப்பற்றையும்,
தமிழ் உணர்வையும்
இக்கவிதைத் தொகுப்பு
பறைசாற்றி நிற்கின்றது.
தென்தமிழ் ஈழ மண்ணின்
மைந்தரான ஸ்ரீயின்
மண்வாசனைமிக்க தமிழ்
உணர்வுக் கவிதைகள் இலகுவில்
படித்து இன்புறும் வகையில் எளிய
நடையில் அமைந்துள்ளன.
எமக்குப் பழக்கமான சொற்களால்
ஆக்கப்பட்டுள்ளன. இது மிகவும்
வரவேற்கத்தக்கது. ஈழத் தமிழ்
மக்களின் இன்றைய
காலகட்டத்தின் வரலாற்றுப்
பதிவுகளாக அவரது கவிதைகள்
விளங்குகின்றன.

எனது உடன்பிறப்புக்கள்
போர்க்காலச் சூழலைச்
சித்திரிக்கும்
கவிதைகளை,சிறுகதைகளை,
போர் உலா போன்ற பரணிகளைப்
போர்க்களத்திலிருந்தே
படைத்துள்ளார்கள். அந்த வழியில்
நின்று புலம்பெயர்ந்து வாழும் ஸ்ரீ
தாய்மண்ணின் நிகழ்வுகளைக்
கவிதைகளுக்குப் பொருளாக்கிப்
பாடியிருப்பதைக் கண்டு மட்டற்ற
மகிழ்ச்சி.

அணிந்துரையிலிருந்து......